

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 222 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 10 – சனிக்கிழமை 23 மார்ச் 2024 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 222 : Thiruvalluvar Year - 2055 - Panguni 10 - Saturday 23 March 2024 - Madurai 8 Pages ₹ 5.00

## டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் கைது

# ஜனநாயகத்தின் மீதான கொடூரத் தாக்குதல் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, மார்ச் 23-**

**டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் அவர்கள் கைது செய்யப்பட்டது ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டதை கண்டித்து, சென்னையில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை சுட்டிக்காட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நாட்டின் தலைநகரில் ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலை தி.மு.க. வன்மையாகக் கண்டிக்கிறது என்று கூறியுள்ளார்.**

டெல்லி அரசின் மதுபானக் கொள்கை ஊழல் தொடர்பான பண மோசடி வழக்கின் தொடர்பாக அம்மாநிலத்தின் 2 அமைச்சர்களை அமலாக்கத் துறை கைது செய்தது. இருவரும் தற்போது சிறையின் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இதுவரை ஜாமீன் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக அம்மாநில முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலிடம் விசாரணை நடத்த வேண்டும் என அமலாக்கத் துறை அவருக்கு சம்மன் அனுப்பியது.

‘அமலாக்கத் துறை தனக்கு சம்மன் அனுப்பியது சட்ட விரோதம்; தான் எந்தத் தவறும் செய்யவில்லை’ என்று கூறி டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் விசாரணைக்கு ஆஜராக மறுத்து வந்தார்.



கொள்கை உருவாக்கம் இறுதி செய்யப்படுவதற்கு முன் நடைபெற்ற கூட்டங்கள் மற்றும் லஞ்சக் குற்றச்சாட்டுகள் குறித்து கெஜ்ரிவாலின் வாக்குமூலத்தை அமலாக்கத் துறை பதிவு செய்ய விரும்புகிறது. ஆனால், இந்த சம்மன்கள் சட்டவிரோதம் எனவும், அரசியல் உள்நோக்கம் கொண்டவை எனவும் கெஜ்ரிவால் கூறிவந்தார்.

அவர் விசாரணையை தவிர்ப்பது தொடர்பாக 2 புகார் மனுக்களை டெல்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை சமீபத்தில் தாக்கல் செய்தது.

### புகார்கள் தொடர்பான ஆவணங்களை கெஜ்ரிவாலிடம் வழங்குமாறு உத்தரவு!

இவ்வழக்கில் கெஜ்ரிவால் சமீபத்தில் நீதிமன்றத்தில் ஆஜரானார். அப்போது அமலாக்கத் துறை சம்மன்களைத் தவிர்ப்பது தொடர்பான வழக்கில் கெஜ்ரிவாலுக்கு ஜாமீன் வழங்கி கூடுதல் முதன்மை பெருநகர மாஜிஸ்திரேட் திவ்யா மல்ஹோத்ரா உத்தரவிட்டார். மேலும், புகார்கள் தொடர்பான ஆவணங்களை கெஜ்ரிவாலிடம் வழங்குமாறு அமலாக்கத் துறைக்கு உத்தரவிட்டார்.

அதேவேளையில், இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்கு கோரி டெல்லி முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கெஜ்ரிவால் மனு தாக்கல் செய்தார். ஆனால் அவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தப் பின்னணியில் தான், மதுபான கொள்கை ஊழல் வழக்கில் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை வியாழக்கிழமை இரவு அமலாக்கத் துறை கைது செய்தது.

முன்னதாக இந்த சம்மன்களை எதிர்த்து கெஜ்ரிவால் தரப்பில் டெல்லி உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு, நீதிபதிகள் சுரேஷ் குமார் கெய்த், மனோஜ் ஜெயின் அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

கெஜ்ரிவால் தரப்பில் மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி ஆஜரானார். அவர் கூறும்போது, “மக்களவை தேர்தல் நெருங்கும் நேரத்தில் முதல்வர் கெஜ்ரிவாலை கைது செய்ய அமலாக்கத் துறை முயற்சி செய்கிறது. இதற்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும்” என்றார்.

### வழக்கின் அடுத்த விசாரணை ஏப். 22ஆம் தேதி நடைபெறும்!

அமலாக்கத் துறை சார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எஸ்.வி.ராஜு, “கெஜ்ரிவால் விசாரணைக்கு ஒத்துழைப்பு தர மறுக்கிறார். பலமுறை சம்மன் அனுப்பியும் அவர் ஆஜராகவில்லை. அவருக்கு எதிராக போதுமான ஆதாரங்கள் உள்ளன” என்று தெரிவித்தார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், “கைது நடவடிக்கைக்கு தடை விதிக்க வேண்டும் என்று கெஜ்ரிவால் தரப்பில் கோரப்படுகிறது. இப்போதைய நிலையில் எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது. வழக்கின் அடுத்த விசாரணை ஏப்ரல் 22ஆம் தேதி நடைபெறும்” என்று தெரிவித்தனர்.

கைது நடவடிக்கைக்கு இடைக்காலத் தடை விதிக்க உயர்நீதிமன்றம் மறுத்துவிட்ட நிலையில் அமலாக்கத் துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு டெல்லியில் உள்ள கெஜ்ரிவாலின் வீட்டுக்குச் சென்று சோதனை நடத்தினர். அவரிடம் சுமார் 2 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. இரவு 9.20 மணி அளவில் அவர் கைது செய்யப்பட்டார்.

டெல்லி அமலாக்கத்துறை அலுவலகத்தில் வைத்து கெஜ்ரிவாலிடம் அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தினர். மருத்துவக்குழுவினர் அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு வந்து கெஜ்ரிவாலுக்கு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

### கெஜ்ரிவால் கைதினைக் கண்டித்து முதல்வர் வலைதளப் பதிவு!

இதைத்தொடர்ந்து, அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் டெல்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றத்தில் நீதிபதி பவேஜா முன்பு ஆஜர்படுத்தப்பட்டார். அரவிந்த் கெஜ்ரிவாலை 10 நாட்கள் காவலில் வைத்து விசாரிக்க அமலாக்கத்துறை கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கிடையே, அரவிந்த் கெஜ்ரிவால் கைது நடவடிக்கைக்கு எதிராக தேர்தல் ஆணையத்தில் “இந்தியா” கூட்டணி சார்பில் நேற்று மாலை புகார் அளிக்கப்பட்டது.

**டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டதை கண்டித்து, சென்னையில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை சுட்டிக்காட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “நாட்டின் தலைநகரில் ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலை தி.மு.க. வன்மையாக கண்டிக்கிறது” என்று கூறியுள்ளார்.**

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்,

# க.பொன்முடி மீண்டும் அமைச்சராகப் பொறுப்பேற்றார் !

## உயர்கல்வித்துறை ஒதுக்கீடு

**சென்னை, மார்ச் 23-**

**உச்சநீதிமன்றத்தின் கண்டனத்தை தொடர்ந்து, பொன்முடிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் ஆர்.என்.ரவி அழைப்பு விடுத்தார். நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், பொன்முடிக்கு ஆளுநர் ஆர். என்.ரவி பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.**

சொத்து வழக்கில் முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைத்து உச்சநீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது. உச்சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, எம்.எல்.ஏ. பதவியில் பொன்முடி தொடர்வதாக சட்டப்பேரவைச் செயலகம் அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து பொன்முடிக்கு அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆளுநருக்கு பரிந்துரை செய்தார். ஆனால், இந்த பரிந்துரையை ஏற்க ஆளுநர் மறுத்து விட்டார்.

ஆளுநரின் இந்த நடவடிக்கையை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த வழக்கு தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது, முதலமைச்சர் பரிந்துரைத்தும்



பொன்முடிக்கு அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து வைக்க மறுப்பது ஏன்? என ஆளுநரை உச்சநீதிமன்றம் கண்டித்தது.

தண்டனையை நிறுத்தி வைத்த பிறகு இவ்விவகாரத்தில் தலையிட ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும், அரசியல் சாசன சட்ட விதிகளை ஆளுநர் பின்பற்ற வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். பொன்முடிக்கு மீண்டும் அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துவைக்க ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் 24 மணிநேரம் கெடு விதித்திருந்தது. 24 மணி நேரத்திற்குள் ஆளுநர் நல்ல முடிவை எடுக்காவிட்டால் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் உச்சநீதிமன்றம் எச்சரித்தது.

இந்நிலையில், பொன்முடிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் ஆர்.என்.ரவி அழைப்புவிடுத்து நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், பொன்முடிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

### கண்டனத்திற்கு பணிந்தார் ஆளுநர்!

சொத்து வழக்கில் பொன்முடிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைத்து உச்சநீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது உச்சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, எம்.எல்.ஏ. பதவியில் பொன்முடி தொடர்வதாக சட்டப்பேரவைச் செயலகம் அறிவித்தது.

பொன்முடிக்கு அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆளுநருக்கு பரிந்துரை செய்தார்.

ஆனால், இந்த பரிந்துரையை ஏற்க ஆளுநர் மறுத்து விட்டார் ஆளுநரின் இந்த நடவடிக்கையை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது இந்த வழக்கு தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது முதலமைச்சர் பரிந்துரைத்தும் பொன்முடிக்கு அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து வைக்க மறுப்பது ஏன்? என ஆளுநரை உச்சநீதிமன்றம் கண்டித்தது

தண்டனையை நிறுத்தி வைத்த பிறகு இவ்விவகாரத்தில் தலையிட ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை நீதிபதிகள் அரசியல் சாசன சட்ட விதிகளை ஆளுநர் பின்பற்ற வேண்டும் நீதிபதிகள் பொன்முடிக்கு மீண்டும் அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் 24 மணிநேரம் கெடு விதித்திருந்தது. இதற்கு அடிபணிந்த ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி பிரமாணத்தை செய்து வைத்தார்.

முன்னதாக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, பொன்முடியை அமைச்சராக பதவியேற்க, ஆளுநர் அழைப்பு விடுத்த தகவலை ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரல் பதிவு செய்தார். எனவே, ஆளுநருக்கு எதிராக எந்த உத்தரவுகளும் பிறப்பிக்க வேண்டாம் என ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரல் கோரிக்கைவிடுத்தார்.

தனது செயலுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி மன்னிப்பு கோரியதாகவும் அட்டர்னி ஜெனரல் வெங்கட்ரமணி தெரிவித்தார். இதைத்தொடர்ந்து ஆளுநரின் நடவடிக்கையை எதிர்த்து தொடரப்பட்ட மனு முடித்து வைக்கப்பட்டது.

நாட்டின் ஜனநாயகம் உச்சநீதிமன்றத்தால் காப்பாற்றப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான அபிஷேக் சிங்கி, வில்சன் ஆகியோர் குறிப்பிட்டனர்.

இதனிடையே, அமைச்சராகப் பதவியேற்ற பொன்முடிக்கு மீண்டும் உயர்கல்வித் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொன்முடிக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்து மீண்டும் உயர்கல்வித் துறையை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற முதலமைச்சரின் பரிந்துரையை ஆளுநர் ஏற்றுக் கொண்டார்.

பொன்முடிக்கு மீண்டும் உயர்கல்வித் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது.

---

## நாடாளுமன்றத் தேர்தல் :

## கழகத் தலைவர் பிரச்சாரம் தொடங்கினார்!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று, நாடாளுமன்றத் தேர்தலில் திருச்சி - பெரம்பலூர் தொகுதிகளின் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து திருச்சி, சிறுகனூரில் தேர்தல் பிரச்சாரம் செய்து, - தமது நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கினார்.

---

## பாஜக கூட்டணி

